## காமன்வெல்த் பளுதூக்கும் போட்டியில்

# வெள்ளிப்பதக்கம் வென்ற ராஜா முத்துப்பாண்டி!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!




சென்னை, ஜூலை 28 –

ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற ராஜா முத்துப்பாண்டிக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்தும் பாராட்டுகளும் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

ஸ்காட்லாந்தில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்று, வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கும் கோவில்பட்டி சங்கரலிங்கபுரத்தைச் சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

அவர் மென்மேலும் பல்வேறு உயரங்களை அடைய எனது வாழ்த்துகள்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு!

### தனியார் பால், தயிர் விலை 2-ஆவது முறையாக உயர்வு!

சென்னை, ஜூலை 28 -

தமிழகத்தில் இவ்வாண்டில் 2ஆவது முறையாக தனியார் பால் நிறுவனங்கள் பால், தயிர் விலையை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தி யுள்ளன. இதனால், ஆவின் பாலுக்கான தேவை அதிகரித்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக தமிழ்நாடு பால் முக வர்கள் தொழிலாளர்கள் நலச்சங்கம் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் சு.ஆ.பொன்னுசாமி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: ஆரோக்யா வை தொடர்ந்து அமிர்தா வேதா, சன், ராஜ், சக்ரா, திருமலா, ஜெர்சி, ஹெரிடேஜ், டோட்லா உள்ளிட்ட நிறுவனங்கள் நிகழாண்டில் 2ஆவது முறையாக பால், தயிர் ஆகியவற்றின் விலையை ஞாயி ற்றுக்கிழமை (ஜூலை 26) முதல் லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தியுள்ளன.

பால் உற்பத்தி குறைவு, கொள்முதல் விலை மற்றும் மூலப்பொருள்களின் விலை உயர்வு காரணமாக விலை உயர்த்தப்பட்டாலும், பால் முகவர்களின் 'கமிஷன்' மற் றும் ஊக்கத் தொகையை உயர்த்த தனியார் நிறுவனங்கள் முன்வரவில்லை. எரிபொ ருள், கடை வாடகை, ஊழியர் ஊதியம் உள்ளிட்ட செலவுகளைக் கருத்தில் கொண்டு, பால் முகவர்களுக்கு சதவீத அடிப்படையில் கமிஷன் மற்றும் ஊக்கத் தொகை வழங்கவேண்டும்.

இந்த ஆண்டில், மொத்தமாக லிட்ட ருக்கு ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளதால், குறைந்த விலை கொண்ட ஆவின் பாலை மக்கள் அதிகம் வாங்கும் நிலை உருவா கியுள்ளது. அதனால், ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் வாய்புள் ளதால், தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.



முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் 11ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி ராமேஸ்வரம் பேய்க்கரும்பில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கே.கதிரவன், ராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவர் நாசர்கான், துணைத்தலைவர் தட்சிணாமூர்த்தி உட்பட கட்சி நிர்வாகிகள் மற்றும் நகர் கழக, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்

### ஜூலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாடு மற்றும்

# முக்கிய கேள்விகளுக்கு நேரடி பதில் தராமல் தவிர்ப்பதா?

### மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 28-

தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாடு தொடர்பான முக்கிய கேள்விகளுக்கு நேரடியான பதிலைத் தவிர்த்த ஒன்றிய அரசு என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், கடந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாட்டில் கேலோ இந்தியா (Khelo India) திட்டம் மற்றும் பிற ஒன்றிய ஆதரவு விளையாட்டுத் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்றும், அதன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள், ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதி பெறப்பட்ட முன்மொழிவுகள், குறிப்பாக ஈரோடு மாவட்டம் தொடர்பான விவரங்கள் என்ன என்பதையும் ஒன்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் விளக்கம் கோரினார் மேலும், தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் அடிமட்ட விளையாட்டு மேம்பாடு குறித்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு, புதிய விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு முன்மொழிவுகள், மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து விளையாட்டு வசதிகளை விரிவுபடுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், 'மேரா யுவா பாரத்' (MY Bharat) தளத்தில் மாவட்ட வாரியாக பதிவு செய்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை, கடந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற இளைஞர்களின் விவரங்கள் மற்றும் மாநிலத்தில் MY Bharat திட்டத்தில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு

(அ) முதல் (ஈ) வரை: 'விளையாட்டு' என்பது மாநிலப் பட்டியலில் அடங்கும் என்பதால், விளையாட்டு உள்கட்டமைப்பு உருவாக்குதல், அதன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அடிமட்ட விளையாட்டை மேம்படுத்துதல் உள்ளிட்ட பொறுப்புகள்

முதன்மையாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகங்களுக்கே உரியவை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்துறையில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்பும் வகையில் மட்டுமே ஒன்றிய அரசு துணைபுரிகிறது என்றும், மேற்கண்ட அம்சங்கள் தொடர்பாக மாநில அரசிடமிருந்து எந்தவித மதிப்பீட்டு அறிக்கையும் அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.



நாடு முழுவதும், தமிழ்நாடு உட்பட, அமைச்சகம் செயல்படுத்தி வரும் திட்டங்கள்

i. கேலோ இந்தியா தேசிய விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம்;

ii. தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கு (NSFs) நிதியுதவி;

iii. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை;

iv. தேசிய விளையாட்டு விருதுகள்:

v. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம்;

vi. பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தேசிய விளையாட்டு வீரர்கள் நலத் திட்டம்;

vii. தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம் (NSDF);

viii. இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) மூலம் விளையாட்டுப் பயிற்சி மையங்கள்; மற்றும்

ix. தேசிய விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையம் (NCSSR).

மேற்கண்ட திட்டங்கள் தொடர்பான விவரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் இணையதளங்களில் பொதுமக்கள் பார்வைக்கு கிடைக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேலோ இந்தியா திட்டம் மற்றும் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம் (NSDF) ஆகியவை தேவையடிப்படையிலான திட்டங்கள் என்றும், மாநில அரசுகள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற தகுதியுள்ள அமைப்புகளிடமிருந்து பெறப்படும் முன்மொழிவுகள், அவற்றின் முழுமை, தொழில்நுட்ப சாத்தியக்கூறு மற்றும் நிதி கிடைப்புத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படுவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு திட்டங்கள், ஒதுக்கப்பட்ட நிதி, விடுவிக்கப்பட்ட தொகை மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பான விவரங்கள் அமைச்சகத்தின் பொது இணையத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

மேலும், மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுடன் இணைந்து விளையாட்டு வசதிகள் மற்றும் சமூக அடிப்படையிலான விளையாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்த அமைச்சகத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

(உ): தமிழ்நாட்டில் 'மேரா யுவா பாரத்' (MY Bharat) தளத்தில் மாவட்ட வாரியாக பதிவு செய்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை இணைப்பு1ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஐந்து மாதங்களில் 1,86,246 இளைஞர்கள் MY Bharat தளத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ஊ): MY Bharat தளம், அனுபவக் கற்றல் திட்டங்கள் (ELPs), வினாடி வினா நிகழ்ச்சிகள் மற்றும் பிற இளைஞர் மையப்படுத்தப்பட்ட வாய்ப்புகளை வழங்கும் டிஜிட்டல் தளமாக செயல்படுகிறது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாட்டிற்காக 473 தன்னார்வப் பணியாற்றும் வாய்ப்புகளும், 933 அனுபவக் கற்றல் திட்டங்களும் (ELPS) மற்றும் பல்வேறு இளைஞர் ஈடுபாட்டு நிகழ்ச்சிகளும் MY Bharat தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விளையாட்டுத் துறை அமைச்சகம் பதிலளித்துள்ளது.

## குமரியில் அரசு வழக்கறிஞர் பொறுப்புக்கு பெண்ணிடம்

# ரூ.15 லட்சம் கேட்டு பேரம் பேசும் த.வெ.க. நிர்வாகி!

### சமூக வலைதளங்களில் ஆடியோ வைரல்!

நாகர்கோவில், ஜூலை 28-

குமரி மாவட்டத்தில் அரசு வக்கீல் பொறுப்பு வழங்க பெண் ஒருவரிடம், த.வெ.க. நிர்வாகி பேரம் பேசும் ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டில் த.வெ.க ஆட்சி பொறுப்பேற்ற பின், கடந்த திமுக ஆட்சியில் இருந்த அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதே போல் அரசு வக்கீல்கள் பொறுப்பில் இருந்தவர்களும் ராஜினாமா செய்து, த.வெ.க.வை சேர்ந்த வக்கீல்கள், அரசு வக்கீல்கள் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டனர்.

அரசு வக்கீல்கள் பொறுப்புக்கு லஞ்சம் வாங்குவதாக புகார்கள் எழுந்து, நீதிமன்றம் வரை விவகாரம் சென்றது. இது தமிழ்நாடு முழுவதும் வக்கீல்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. இந்தநிலையில் குமரி மாவட்டத்திலும் அரசு வக்கீல்களை நியமிக்க, சிலரிடம் பேரம் பேசப்பட்டதாக கூறப்படும் தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக தமிழக வெற்றிக்கழகத்தை சேர்ந்த பெண் வக்கீல் ஒருவரிடம், தவெக நிர்வாகி பேசுவது போன்ற ஒரு ஆடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி பரபரப்பை உண்டாக்கி உள்ளது.

இதில் அந்த பெண் வக்கீலிடம் பேசும் அந்த த.வெ.க. நிர்வாகி, நீங்கள் அரசு வக்கீலுக்கு விருப்பம் தெரிவித்து இருப்பதை அறிந்தேன். பலரும் இந்த பொறுப்புக்கு வர ஆசைப்படுகிறார்கள். நீங்கள் கட்சியை சேர்ந்தவர் என்பதால், உங்கள் பெயரை பரிந்துரைக்கலாம். அதற்கு ரூ.15 லட்சம் என்றால் ஓ.கே. செய்யலாம். 10 நாளில் போஸ்டிங் வந்து விடும். அதன் பின்னர் எளிதில் சம்பாதித்து விடலாம். பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே கடந்த திமுக ஆட்சியில் நிறைய பெண்டிங் பைல்கள் உள்ளன. இந்த நிலங்களுக்கு பத்திரப்பதிவு தொடர்பாக, அரசு வக்கீலிடம் இருந்து கண்டிப்பாக கருத்துரு கேட்பார்கள். அதன் மூலம் சம்பாதிக்க முடியும். நீங்கள் யோசிக்காதீர்கள். உடனடியாக பணம் தயார் செய்ய முடியுமா? என்று பாருங்கள் என்கிறார்.

தற்கு அந்த பெண் வழக்கறிஞர் அவ்வளவு பணம் எல்லாம் முடியாது சார் என்கிறார். உடனடியாக அந்த நிர்வாகி கடைசியாக ரூ.12.50 லட்சம் என்றால் பார்க்கலாம் என்கிறார். ஆனால் அந்த பெண் வழக்கறிஞர் அவ்வளவு எல்லாம் தர முடியாது. த.வெ.க.வில் பணியாற்ற வேண்டும் என எனக்கு மிகவும் ஆசை. கடந்த தேர்தலில் நான் மட்டுமல்ல, எனது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்பட எனக்கு தெரிந்த அனைவரிடமும் த.வெ.க.வுக்கு தான் ஓட்டு போட சொன்னேன். கட்சி பணி செய்ய எனக்கு ரொம்ப ஆசை. அதுவும் அரசு வக்கீல் போன்ற பொறுப்பு இருந்தால் ஆர்வமாக பணியாற்ற வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணினேன்.

பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது எல்லாம் எனது ஆசை இல்லை. நான் வழக்கறிஞராக பதிவு செய்து 7 வருடங்கள் ஆகின்றன. அரசு வக்கீலுக்கு தகுதியானவள் தான். மற்றப்படி நீங்கள் கேட்கும் பணம் எல்லாம் இல்லை சார்... என்கிறார்.

இவ்வாறு அந்த உரையாடல் முடிகிறது. இந்த உரையாடல் தற்போது சமூக வலை தளங்களில் பரவி, பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கட்சி தலைமைக்கும் அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பாக விசாரணை நடந்து வருவதாக கட்சி மூத்த நிர்வாகி ஒருவர் கூறினார். கட்சி வக்கீலிடமே தவெக நிர்வாகி பேரம் பேசியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## காஞ்சிபுரம் செவிலிமேடு பகுதியில்

# தொடர் மின்தடையைக் கண்டித்து மக்கள் சாலை மறியல்!

காஞ்சிபுரம், ஜூலை 27

காஞ்சிபுரம் மாநகராட்சியில் அடங்கிய பல்வேறு வார்டு பகுதிகளில் நாள் தோறும் இரவு 7 மணி முதல் தொடர் மின்தடை பிரச்னை ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட செவிலிமேடு அருகே இந்திரா நகர் பகுதியில் நேற்றிரவு சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக தொடர் மின்தடை ஏற்பட்டதில் அப்பகுதி மக்கள் சாப்பிடவோ, தூங்கவோ முடியாமல் பெரிதும் அவதிப் பட்டனர். அப்பகுதியில் நிலவிய மின்தடை குறித்து சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின்தடை குறித்து மக்களுக்கு மின்வாரிய அதிகாரிகள் முறையான பதில் அளிக்கவில்லை.

இந்நிலையில், தொடர் மின்தடையால் பெரிதும் பாதிக்கப்பட்ட செவிலிமேடு பகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுகூடி, ஓரிக்கைசெவிலிமேடு சாலையில் நேற்று நள்ளிரவு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின்போது, தொடர் மின்தடை மற்றும் மின்வாரிய அதிகாரிகளின் அலட்சியப் போக்கை கண்டித்து ஏராளமான மக்கள் சாலையில் படுத்த படி கண்டன கோஷங்கள் எழுப்பினர். இதனால் ஓரிக்கை செவிலிமேடு சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, சுமார் ஒரு கிமீ தூரத்துக்கு ஏராளமான வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

மேலும், இப்போராட்டத்தின்போது காஞ்சிபு ரம் மாநகராட்சி வார்டு பகுதிகளில் நிலவி வரும் தொடர் மின்தடை பிரச் னைக்கு, சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகள் நேரில் வந்து, நிரந்தர தீர்வு காணும் வரை எங்களின் போராட்டம் தொடரும் என்று உரக்க கோஷமிட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்ததும் காஞ்சிபுரம் தாலுகா போலீசார் விரைந்து வந்தனர். அங்கு மின்தடையை கண்டித்து சாலை மறிய லில் ஈடுபட்ட மக்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர், சம்பந் தப்பட்ட மின்வாரிய அதி காரிகளிடம் பேசி, தொடர் மின்தடை பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் உறு தியளித்தனர். இதை ஏற்று அப்பகுதி மக்கள் கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் பரபரப்பு நிலவியது.

## த.வெ.க.அரசு அலட்சியம்!

# கரூர் மாவட்டத்தில் நீர் நிலைகளைப் பாதுகாத்திட விவசாயிகள் கோரிக்கை!

கரூர், ஜூலை.28.

கரூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள மானாவாரி நீர் நிலைகளை பாதுகாத்திட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர். த.வெ.க. அரசின் அலட்சியத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு பொதுப்பணித் துறை நீர்நிலைகள் உள்கட்டமைப்புகளை வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்கிறது. த.வெ.க. அரசு அமைந்த பின்னர் ஏற்கனவே உள்ள திட்டங்களை தொடர்வதில் மெத்தனம் காட்டி வருகிறது. வெள்ளத் தடுப்பு மற்றும் நீர்வள ஆதாரங்களைப் பராமரிக்கும் பணிகளையும் செய்வதில்லை.

கரூர் மாவட்டத்தில் நீர்வள பாதுகாப்பு துறை அணைகள், குளங்கள், ஏரிகள் மற்றும் பாசனக் கால்வாய்களைப் பராமரித்தல் மற்றும் தூர்வாருதல், பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், தான்தோன்றிமலை, அரவக்குறிச்சி, குளித்தலை, கிருஷ்ண ராயபுரம், க. பரமத்தி, தோகைமலை, கடவூர் ஆகிய 8 ஒன்றியங்களில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான குளங்கள், குட்டைகள் நீர்வரத்து பாதைகள், நீர் சேமிப்பு ஓடைகள் நீர்நிலைகள், பண்ணை குட்டைகள் உள்ளன.

தற்போது கோடை காலம் என்பதால் அனைத்து பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டு நீர்நிலைகள், குளம், குட்டைகள் வறண்டு காணப்படுகிறது.

இதனை பயன்படுத்தி கொண்டு பொதுப்பணித்துறை அதிகாரிகள் நீர்நிலைகளை பாதுகாத்திட கடந்த ஆட்சியின் போது நடவடிக்கை எடுத்து வந்தனர்.. குறிப்பாக கரூர் மாவட்டத்தில் பஞ்சப்பட்டி ஏரி, வெள்ளியணை குளம், ஜெகதாபி குளம், தாதம்பாளையம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை குளங்கள் சுமார் 100 ஏக்கருக்கு மேல் 500 ஏக்கர் நிலப்பரப்பு வரை அமைந்துள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில் பருவமழை தொடங்கும் என்பதால் அதற்கு முன்பாக நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள், முட்செடிகள் கழிவுகள் ஆகியவற்றை அகற்றி மழை நீர் முழுமையாக நீர்நிலை களுக்குள் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த திமுக ஆட்சியில் கரூர் மாவட்டத்தில் பல்வேறு நீர்நிலைகள், நீர் ஓடைகள் குளம், குட்டைகள் தூர்வாரப்பட்டு மழைநீர் வருவதற்கு வசதி செய்யப்பட்டது. தற்போது புதிதாக பெற்றுள்ள தமிழக வெற்றி கழக அரசு விவசாய நிலத்தில் அக்கறை கொண்டு நீர் நிலைகளை பாதுகாத்திட நடவடிக்கை எடுக்கவில்லை.

இது குறித்து குறை தீர்க்கும் கூட்டங்களிலும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலும், தொடர்ந்து வலியுறுத்தி மனுக்களை அளித்தும் பேசியும் வருகிறோம். திங்கள் தோறும் நடைபெறும் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்டம் முழுவதும் நடைபெற்ற ஜமாபந்தி கூட்டம், குடிகள் மாநாடு மாதம் தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைவிற்கும் நாள் கூட்டம் என தொடர்ந்து கோரிக்கைகளை கூறி வருகிறோம். எனினும் பார்க்கிறோம் கேட்கிறோம் என்று தான் நிர்வாகத்திடம் இருந்து பதில் பதில் வருகிறது. புதிதாக இந்த த.வெ.க அரசு நிர்வாகத்திடம் எதையும் கேட்கவில்லை. வழக்கமாக மேற்கொள்கின்ற நீர் நிலைகளை பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டும் என்று தான் கேட்கின்றோம்.

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு நீர்நிலைகளை பாதுகாக்கின்ற பணிகளை உடனடியாக தொடங்கிட வேண்டும் என கரூர் மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தி யுள்ளனர்.